பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறங்களில் மகளிர் குழுக்கள் அமைத்து சமுதாய அமைப்புகள் ஏற்படுத்துதல் குறித்த பயிற்சி

கையேடு



## தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

கோயம்புத்தூர்



பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்

# நகர்ப்புறங்களில் மகளிர் குழுக்கள் அமைத்து சமுதாய அமைப்புகள் ஏற்படுத்துதல் குறித்த பயிற்சி

## கையேடு


ஆக்கம் :

நகராட்சி நிர்வாக ஆணையரகம்

சென்னை

பயிற்சி வடிவமைப்பு & செயலாக்கம்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

கோயம்புத்தூர்

© தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 011

திருத்திய பதிப்பு : 2007

வெளியிடுவோர்

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்
203, அழகேசன் சாலை,
சாயிபாபா காலனி,
கோயம்புத்தூர் - 641 011
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி : 0422-2441086,
நிகரி : 0422 - 2457404
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net
இணையம் : tnius.org

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 5 |
| 1. | வறுமையும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களும் | 7 |
| 2. | பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நோக்கங்கள் மற்றும் சிறப்புக்கள் | 13 |
| 3. | பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் உட்கூறுகள் | 15 |
| 4. | மகளிர் குழு அமைத்துச் சமுதாய அமைப்பு ஏற்படுத்துதல் | 27 |
| 5. | SJSRY திட்டத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டிய சமுதாய அடிப்படையிலான அங்கங்கள் மற்றும் அதன் பொறுப்புக்கள் | 34 |
| 6. | திட்டத்தின் நிர்வாக அமைப்பு | 40 |
| 7. | திட்டங்கள் தயாரித்தல் | 41 |

# முன்னுரை

மனித சமுதாயம் வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருப்பதை உறுதி செய்வது வறுமைக்குறைவாகும். மனிதனின் அடிப்படை தேவை களான உணவு, உடை, இருப்பிடம் போன்றவை தடையின்றி தேவையான அளவு அனைவருக்கும் கிடைப்பதே வளர்ச்சியின் அளவுகோல்.

அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒவ்வொருவரும் போதிய வருமானம் ஈட்டிட வேண்டும். அவ்வாறு அடிப்படை தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்ள இயலாமல் பசி, பட்டினியோடு இருக்க இருப்பிடமின்றி வாழ்க்கையில் போராடிக்கொண்டிருப்போரை நெறிப்படுத்த மத்திய அரசும், மாநில அரசும், பல திட்டங்களை நடைமுறைப் படுத்திக்கொண்டு வருகின்றன. அத்திட்டங்களில் ஒன்று பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் *(Swarna Jayanthi Sahari Rojga Yojana - SJSRY)* இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் நகர்ப்புறத்தில் வேலை வாய்ப்பை உருவாக்குவதும் சுய தொழில் செய்ய ஊக்குவிப்பதும் ஆகும்.

இத்திட்டம் நகர்ப்புறத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடித்தள மக்களிடையே சமுதாயக் குழுக்களை ஏற்படுத்தி அதன் மூலம் சுய தொழில் தொடங்க மற்றும் வேலை வாய்ப்புக்களைப் பெற்று வறுமையின் பிடியில் இருந்து விடுபட இத்திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் அவர்களுக்குப் பல்வேறு பயிற்சிகள், விழிப்புணர்வு, கல்வி, தகவல், தொழில்கள் அனுபவம் போன்றவை அவசியமாகிறது. அதன் அடிப்படையில் இத்திட்டத்தைச் செயல்முறைப்படுத்த திறன்வளர் பயிற்சி, தகவல் கல்வி, மற்றும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று அறியும் முறை

போன்ற பிரிவுகளின் கீழ் பல்வேறு பயிற்சிகளும் கருத்தரங்குகளும் பணிப்பட்டறைகளும் வெளிமாநிலத்திற்கு கல்வி சுற்றுலா பயணங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்துப் பயிற்சி அளிக்க தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தைத் தமிழக அரசு முதன்மை நிறுவனமாகத் தேர்வு செய்துள்ளது. சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்கள் மற்றும் பயனாளிகளுக்கு இக்கையேடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். இக்கையேட்டினை உருவாக்குவதில் பங்களித்த அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோயம்புத்தூர் - 641 011**

**ப. கனகசபாபதி**

**இயக்குநர்**

# 1. வறுமையும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களும்
## (POVERTY AND COMMUNITY DEVELOPMENT PROGRAMMES)

**முன்னுரை:**

சுதந்திரம் அடைந்தது முதல் 30 வருடங்களில் நமது நாட்டில் பல்வேறு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வந்துள்ளன. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட அதே வேகத்தில் பல்வேறு துறைகளிலும் முன்னேற வேண்டும் என்பதை மட்டுமே எண்ணமாகக் கொண்டு அரசும் முழுவேகத்துடன் செயலாற்றியது. அவசர மற்றும் ஆதாரத் தேவைகள் ஓரளவிற்குச் செயல் வடிவம் பெற்று நிமிர்ந்து பார்க்கையில் முதலில் தெரிந்தது வறுமையின் பிடியிலிருந்து முற்றிலும் விடுபடாத சாதாரண சேரி வாழ் மக்கள் ஆவர். அவர்களது ஏழ்மைக்குப் பல காரணங்கள் இருந்தன.

அரசும், சிந்தனையாளர்களும் ஏழ்மையைப் போக்க விஞ்ஞான பூர்வமாக அணுக முற்பட்டனர். 1980-க்குப் பிறகு நாட்டின் பொருளாதார நிபுணர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் ஓர் சவாலாக விளங்கியது இவ்வேழ்மையே. இம்மேம்பாட்டுப் பணிகளுக்கு இடையே மக்கட் தொகைப் பெருக்கம், உணவுத் தட்டுப்பாடு, சுற்றுச்சூழல் கேடு, கச்சாப் பொருட்கள் பற்றாக்குறை முதலியன, திட்டம் தீட்டுவோர்க்குச் சவால்களாக விளங்கினாலும் இவற்றிற்கு அவ்வப்போது தீர்வுகள் காணப்பட்டு வந்துள்ளன. ஆயினும் ஏழ்மை என்பது இன்று வரையும் பெருத்த சவாலாகவே விளங்கி வருகிறது என்பதும் மறுக்க இயலாத உண்மை. எவ்வளவு தான் வளர்ச்சி ஒரு புறம் ஏற்படினும் மற்றொரு புறம் ஏழ்மையும் தொடர்ந்து இருந்து கொண்டுதான் வருகிறது.

தவிர, ஏழ்மை என்பது நகர்ப்புற ஏழ்மையெனவும், கிராமப்புற ஏழ்மையெனவும் வெளிப்படையாக அமைந்துள்ளது. கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை மக்கள் தனியாகத் தெரியும் வகையில் உள்ளதால் அவர்களை

அறிந்து, வேண்டிய நலப் பணிகளை மேற்கொள்ளவும் சாத்தியமாகிறது. அதே போல் நகர்ப்புற ஏழைகளைச் சுலபத்தில் யார் என்று தெரிந்து கொள்ள முடிவதில்லை. மேலும் எங்கு இருக்கக்கூடும் என்பதையும் அனுமானிக்க இயலுவதில்லை. தமது சமூக-பொருளாதாரக் காரணங்களினால் அவர்கள் பல்வேறு பிரிவுகளாகவும், பலவகைப்பட்ட பணிகளிலும் உள்ளனர்.

## ஏழ்மை - ஒரு பார்வை

ஒவ்வொருவரின் பார்வையிலும், ஏழ்மை என்பது ஒவ்வொரு விதமாக அர்த்தம் கொள்ளப்படுகிறது. சிலர் பொருளாதாரம் சம்பந்தப்பட்டது என்பர். மற்றும் சிலர், தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளைப் பொறுத்தது என்பர். கிராமப் புற மக்களிடையே நிலவுவதே வறுமையென்பதும் மற்றொரு கருத்து. இன்னும் ஒரு பிரிவினர், நகர்ப்புற மக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வே வறுமைக்குக் காரணம் என்றும் கருதுகின்றனர். இவையனைத்துக்கும் மேலாக நாட்டின் நிபுணர்கள் மற்றும் திட்டம் தீட்டுவோர் வறுமைக்குக் குறிப்பிடும் காரணிகள் முற்றிலும் மாறானவை.


இந்தப் பல தரப்பட்ட பிரிவினரின் எண்ண வேறுபாடுகளின் காரணமாகவே பெருவாரியான ஏழ்மையகற்றும் திட்டங்கள் சரியானதொரு இலக்கினை ஈட்டுவதில்லை. முடிவில் ஏழ்மை என்பது தீராத தலைவலியாகவே தொடர்ந்து வருகிறது.

## வறுமை வட்டம்

சரி, இந்த ஏழ்மைக்குக் காரணங்களாக இருப்பவை எவை? புதுதில்லி, National Institute of Urban Affairs 'NIUA' என்ற நிறுவனம்1988இல் எடுத்த சர்வேயின் படி, குறைந்த வருமானமே ஏழ்மையின் ஒரு தலையாய காரணமாகப் பொதுமக்களால் குறிப்பிடப் பட்டுள்ளது.

கிராமப்புறத்திலிருந்து பல்வேறு காரணங்களுக்காக நகர்ப்புறம் வருவோர், ஏழ்மைக்கு முக்கியக்காரணம் என்பது மற்றுமொரு கோட்பாடு. வேலையில்லாத் திண்டாட்டம் ஏழ்மைக்கு வழி கோலுகிறது என்பதும் பிரிதொரு காரணம். வறுமைக்குக் காரணம் கல்வியின்மையே என்பதும் இந்த சர்வேயின் கண்டுபிடிப்பு. அதேபோன்று வறுமையின் பிடியிலிருந்து வெளிவர உறுதியின்மை போன்றவையும் அந்த சர்வேயில் தெரிய வந்துள்ளது. இவற்றை ஊன்றிக் கவனித்தால் வறுமையென்பது ஓர் வட்டத்தினையொத்து வருவது புலப்படும்.

**வறுமையெனும் வட்டம்**



மேற்கண்டவற்றை உட்காரணங்களாகக் கொண்டால், ஏழ்மை ஏற்படச் சில வெளிக்காரணங்களும் உள்ளன. பண வீக்கம், மக்கள் நகரத்திற்கு இடம் பெயர்தல் ஆகியவை வெளிக்காரணங்களாகும்.

## மக்கள் நகரத்திற்கு இடம் பெயர்தல் - ஓர் அலசல்

நகர்ப்புறத்தில் மக்கட் தொகை எவ்வாறு வேகமாக வளர்ந்து வருகிறது என்பது அதிர்ச்சி தரும் புள்ளிவிவரமாகும்.

1951 -இல் நகர்ப்புற மக்கட் தொகை 65.00 மில்லியன்

1981-இல் நகர்ப்புற மக்கட் தொகை160.00 மில்லியன்

1984-இல் நகர்ப்புற மக்கட் தொகை238.70 மில்லியன்

2000-இல் நகர்ப்புற மக்கட் தொகை325.00 மில்லியன்

இவ்வாறு உயர்ந்து கொண்டே போகும் நகர்ப்புற மக்கள் தொகையினால் ஏற்படும் பின் விளைவுகள் மிகவும் கவலைகொள்ள வைக்கும். மேலும் மனிதனின் அடிப்படைத்தேவைகளான குடிநீர், கழிப்பிட வசதி, குப்பையகற்றுதல், உடல் நலம் ஆகியவை போதுமான அளவில் கிடைக்கப்பெறாமல் அவதிப்பட நேரிடும்.

## இந்திய நகரங்களில் வறுமைக்கான சில காரணங்கள்

1. கிராமப்புறங்களிலிருந்து பொதுமக்கள் பெருமளவில் நகர்ப் புறத்திற்கு இடம் பெயருதல்.
2. நகர்ப்புற அடிப்படை வசதிக் கட்டமைப்பு குறைவாக இருத்தல்.
3. அடிப்படை வசதிகளை அணுக இயலாமை.
4. வேலை வாய்ப்பின்மை மற்றும் குறைந்த ஊதியம்.
5. மக்களிடையே விழிப்புணர்ச்சியின்மை.
6. மக்கள் மாறுவதற்குரிய வழி முறைகளைக் கைகொள்ள இயலாமை.

## அரசுத் திட்டங்கள்

சமூக மேம்பாட்டுத் திட்டங்களைக் கடந்த காலங்களிலிருந்து அரசு அவ்வப்போது மேற்கொண்டு வருகிறது என்பதனைக் கீழ்க்காணும் விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

### நகர்ப்புற சமூக மேம்பாட்டுத் திட்டம் (1958)

சமூகப் பங்கேற்பினையும் சுய உதவியினையும் வலியுறுத்தும் திட்டம் நகர்ப்புற சமூக மேம்பாட்டுத் திட்டமாகும்.

### நகர்புற அடிப்படை வசதிகள் திட்டம் (1981)

இது தாய் சேய் நலம், குடிநீர், கழிப்பிடம், மகளிருக்கு வருவாய் ஏற்படுத்துவது, உடல்நலம் மற்றும் கல்வி வசதி போன்றவற்றை, முன்னிறுத்திய திட்டம் ஆகும்.

1990-91 நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித்திட்டம் (500 நகரங்களுக்கு)

1995 பிரதம மந்திரியின் ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்புத்திட்டம் (345 இரண்டாம் நிலை நகரங்களுக்கு)

### பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

இது, சமூக அமைப்பினை ஏற்படுத்தி, சுய சேமிப்பு மற்றும் சுய உதவிக்குழுக்களை ஆதரித்து வேலை வாய்ப்பு வசதிகளையும் உண்டாக்கித் தரும் திட்டமாகும்.

### தெளிவாகும் ஓர் உண்மை

மேற்கண்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கூர்ந்து நோக்கினால் ஓர் உண்மை புலப்படும். அதாவது, அரசு உதவி எப்போது கிடைக்கும்

என்ற நம்பிக்கையினை விட்டுத் தள்ளி, தமது தேவைகளைப் பூர்த்தி செய்யத் தாமே வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளுதல் நிலைத்த பயனைத்தரும் என்பதைச் சமுதாயம் உணரச் செய்தல். அவ்வாறு சமுதாய அமைப்பு சுய தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுகையில் அரசும் ஒத்துழைப்பு நல்கும் என்ற உண்மையைச் சமுதாயத்திற்கு உணர்த்துதல்.

மேலிருந்து கீழாக வழக்கமான முறையில் அரசுத்திட்டங்களைப் பொது மக்களுக்குத் தருவதை விட்டு இனிப் பொதுமக்களே சமுதாய அமைப்பின் மூலம் கீழிருந்து மேலாகத் திட்டமிட்டு, அதற்குப் பொருளாதாரப் பங்களிப்பும் செய்து கொள்வது என்ற நிலை தற்போது வலியுறுத்தப்படுகிறது. இத்தகைய சமூக அமைப்புக்களை உருவாக்கி அதன் மூலமே மேம்பாட்டுக்கான வழிவகைகளைக் காணும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தினைக் குறித்து, அடுத்து வரும் அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளது.

# 2. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத்திட்டம்- நோக்கங்கள் மற்றும் சிறப்புகள்

## (SJSRY - OBJECTIVES AND SPECIALITIES)

### நோக்கம் (OBJECTIVES)

நகரத்தில் வசிக்கக் கூடிய வேலை வாய்ப்பற்ற ஏழைகள் மற்றும் தங்கள் தகுதிக்குக் குறைந்த வேலை செய்யும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் "பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் கீழ்க்காணுமாறு செயல்பட உள்ளது.

1. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இலாபகரமான வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.
2. சுய வேலை வாய்ப்புப் பணிகளில் ஏழை மக்களைப் ஈடுபட வைத்தல்.
3. கூலி வேலை வாய்ப்பின் மூலம் பல்வேறு பணிகளில் பங்கேற்கச் செய்தல்.

'பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்' சமூக அமைப்புகளை உருவாக்கி ஏழை மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை வழங்குகின்றது.

### நிதியுதவி

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுவதற்கு மைய அரசால் 75 சதவிகிதமும் மாநில அரசால் 25 சதவிகிதமும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

### சிறப்புக்கூறுகள்

இத்திட்டம் 'சமூக அமைப்புகள் அதிகாரம் அடைதல்' என்ற கொள்கையின் அடிப்படையில் எழுந்த திட்டமாகும். பாரம்பரியமாகத் திட்டங்கள் மேலிருந்து கீழாகச் செயலாக்கப்படும் என்ற

நம்பிக்கையிலிருந்து மாறுபட்டு, சமூக அமைப்புகளை அமைத்து அவற்றை முன்னேறச் செய்து, அவற்றின் மூலம் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளையும், வாய்ப்புகளையும் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்குச் செய்து தருவதே இத்திட்டத்தின் சிறப்பாகும்.

## சமூக அமைப்புகள் (Community Structures)

இந்த இலக்கினை அடையச் சமூக அமைப்புகளாகிய அண்டை வீட்டுக்குழுக்கள், அண்டை வீட்டுக் கமிட்டிகள் மற்றும் சமுதாய வளர்ச்சிச் சங்கங்கள் ஆகியவற்றை, நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக, அந்தந்தப் பகுதிகளில் அமைக்க வேண்டும். இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து உதவிகள் மற்றும் கடன் தொகைகளை மேற்பார்வையிட்டு வசூல் செய்தல், விண்ணப்பங்களைத் தயார் செய்தல். பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல், பகுதிகளுக்குப் பொருத்தமான நல்ல பல திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவைகள் சமுதாய வளர்ச்சிச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

## செயல்படுத்தும் இடங்கள்

1 இந்தியாவில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகளுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

2 குறிப்பாக நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்கள் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் இத்திட்டம் செயலாக்கப்படும் என்ற அடிப்படையில் செயல்படும்.

## இலக்குக் குழுக்கள் (Target Groups)

1. வறுமைக்கோட்டிற்குக் கீழே வசிக்கும் நகர்ப்புற ஏழை மக்கள்.
2. பெண்கள், பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்கள், உடல் ஊனமுற்ற நபர்கள்.

30 சதவிகிதத்திற்குக் குறையாமல் பெண் பயனாளிகளும், ஆதிதிராவிடர், மலைவாழ் மக்களும் உள்அடங்குவர். 3 சதவிகிதம் உடல் ஊனமுற்ற நபர்களுக்குப் பொருந்தும்.

# 3. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் உட்கூறுகள்
## (SUB - COMPONENTS OF SJSRY)

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் கீழ்க்காணும் இரண்டு வகையான திட்டங்கள் அடங்கும். அவையாவன:-

1. நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம்
2. நகர்ப்புறக் கூலி வேலைவாய்ப்புத் திட்டம்

## நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் (Urban Self Employment Programme)

இத்திட்டம் கீழ்க்காணும் பகுதிகளைக் கொண்டது.

1. நகர்ப்புறத்தில் வசிக்கும் தனிநபர் ஏழைப் பயனாளிக்கு இலாபகரமான வேலை வாய்ப்புக்களை அமைக்க உதவி செய்தல்.
2. நகர்ப்புறத்தில் வசிக்கும் ஏழைப் பெண்கள் குழுவிற்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அமைக்க உதவி செய்தல். இத்துணைத் திட்டத்தை நகர்ப்புறத்தில் வசிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சித் திட்டம் என்றும் அழைக்கலாம்.
3. பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்தல், திறமையும் வலிமையும் மிக்க பயனாளிகள் மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களில் பங்கு பெறுபவர்கள் ஆகியவர்களை மேம்பாடு செய்து அவர்களிடையே உள்ள சிறு தொழில்கள் செய்ய முனையும் திறமையை வளர்த்துக் கொள்ள உதவி புரிதல்.
4. உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்.
5. சிக்கன மற்றும் நாணயச் சங்கம்- சுழல் நிதி-நிறுவுதல்

## செயல்படுத்தும் இடங்கள்

1. இந்தியாவில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகளுக்கும் இத்திட்டம் பொருந்தும்.
2. குறிப்பாக நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை மக்கள் தொகுதிகளுக்கும் இத்திட்டம் "நகர்ப்புறம் முழுமையும் செயலாக்கப்படும்" என்ற அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும்.

## இலக்குக் குழுக்கள் *(Target Groups)*

1. காலந்தோறும் வறுமைக்கோட்டிற்குக் கீழே வசிக்கும் நகர்ப்புற ஏழை மக்களைநோக்கி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இத்திட்டம் செயலாக்கப்படும்.

2. இத்திட்டத்தின் கீழ் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஊனமுற்ற நபர்கள் ஆகியோரும் காலந்தோறும் அரசால் இனங்காட்டப்படுவர். இத்தகைய நபர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். 30 சதவிகிதத்திற்குக் குறையாமல் பெண் பயனாளிகட்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. அந்தந்தப் பகுதிகளில் வசிக்கக்கூடிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மொத்த மக்கட்தொகையின் விகிதாச்சார அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர். இத்திட்டத்தில் உடல் ஊனமுற்றோருக்கு 3 சதவிகிதம் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்படும்.

3. கல்வித்தகுதி - இத்திட்டத்தின் கீழ் பயனாளிக்கென்று எந்தவொரு அடிப்படைக் கல்வித்தகுதியும் நிர்ணயிக்கப்படவில்லை. எனினும் பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டத்திற்கும், இத்திட்டத்திற்கும் சுயவேலை வாய்ப்பில் கல்வித் தகுதியில் வேறுபாடுண்டு என்பதற்காக 9-ஆம் வகுப்பிற்கு மேலே

படித்தவர்கட்கு இத்திட்டம் பொருந்தாது என்ற கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கூலிவேலை வாய்ப்புத் திட்டங்களில் இக்கல்வி வரம்பினைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை. பயனாளிகளுக்கு நிதி ஆதாரம் வழங்குவதற்கு முன்னர், அவர்களுக்கு எங்கெங்கே பயிற்சிகள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் பணிகட்குரிய திறமைகள் தேவைப்படுகின்றனவோ அவைகளை அவர்களுக்கு உரிய முறையில் வழங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும்

4. உண்மையான பயனாளிகளைத் தேர்வு செய்ய வீட்டுக்கு வீடு கணக்கெடுக்கும் பணி நடைபெறும். வறுமைக்கோட்டினைக் கண்டறியப் பொருளாதார நிலைமைகள் மட்டுமின்றி பொருளாதாரத்தைத் தழுவாத மற்ற வாழ்க்கை நிலைமைகளும் கணக்கெடுக்கும் பொழுது கவனிக்கப்படும். (விவரமான வழிமுறைகள் அட்டவணை II-இல், பக்கம் 27-ல் காண்க). நகர்ப்புற வறுமை ஒழிப்புப் பிரிவு மற்றும் உள்ளாட்சி அமைப்பால் வழிகாட்டப்படும் சமுதாய நலச்சங்கம் ஆகியவை இப்பணியில் ஈடுபடுத்தப்படும். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலகங்கள் மற்றும் அந்தந்த உள்ளாட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். இதனை எளிதாகச் செயலாக்கவும், பயனாளிகளைத் தேர்வு செய்யவும் வீட்டுக் கணக்கெடுப்புப் பணியை மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 'கணக்கெடுப்பு முகமையின் மூலம்' செய்யலாம். இதற்கெனச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள சமுதாய அமைப்புகள் மற்றும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டு இப்பணியை மேற்கொள்ளலாம். பெண்கள் தலைமையேற்று நடத்தும் குடும்பங்களை முன்னுரிமை அடிப்படையில் மற்ற குடும்பங்களிலிருந்தும் மற்ற பயனாளிகளை விடவும் முதன்மைப்

படுத்த வேண்டும். விதவைப் பெண்கள், மணமுறிவு பெற்ற பெண்கள், தனிப்பட்ட பெண்கள், பெண்களே தனியாகச் சம்பாதித்து நடத்தும் குடும்பங்கள் ஆகிய பெண்கள் தலைமையேற்று நடத்தும் குடும்பங்கள் இப்பிரிவில் அடங்கும்.

## உட்கூறுகள் (Sub - Components)

நகர்ப்புறத்தில் உள்ள தனிநபர் ஏழைப் பயனாகளுக்கு வங்கிகள் மூலம் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தி உதவி புரிதல் **(Self Employment Opportunities through Banks to individual Beneficiaries)**, நகர்ப்புறங்களில் உள்ள சிறு தொண்டுப் பணிகள், சிறு வியாபாரங்கள் மற்றும் சிறு பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அல்லது தத்தம் தகுதிக்கேற்ற வேலை வாய்ப்புக்கள் அமையப் பெறாத இளைஞர்கட்கு ஊக்கம் அளித்தல் போன்ற பணிகளுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உள்ளூர் கைவினைத் தொழில்கள் மற்றும் அவர்களது திறமைகளை இத்திட்டத்தின் வாயிலாக ஊக்குவிக்கலாம். ஒவ்வொரு நகரமும் இத்தகைய சிறு தொழில்கள் மற்றும் சிறு கைவினைகளை அந்தந்தப் பகுதிகளுக்குரிய வியாபாரம் செய்யும் தன்மைக்கு ஏற்ற வண்ணமும், பொருளாதாரத்திற்கு ஏற்ற வண்ணமும் விலைவாசிக்கு ஏற்ற வண்ணமும் அமைத்துக் கொள்ளுதல் நல்லது. நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டத்துடன் இதனைத் தொடர்புபடுத்தாதிருக்க வறுமைக் கோட்டிற்குக் கீழே, ஆனால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்த பொருளாதாரம் சாராத மற்ற வாழ்க்கை நிலைகளை அடிப்படையாகக் கொண்ட பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களை மட்டுமே இந்த 'சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் திட்டத்'தின் கீழ் பயனடையுமாறு செய்ய வேண்டும். இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ. 50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) சிறு தொழில் நிறுவ நிதியுதவி அளிக்கப்படும். திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதமாகிய

ரூ. 7,500/- (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) முழு மானியமாகப் பயனாளிக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் (இது குறித்து விவரமாக அறிக்கை இணைப்பு 2-இல் கொடுக்கபட்டுள்ளது.) பயனாளிகள் ஆண்களும் பெண்களுமாக ஒன்றுக்கு மேற்பட்டோர் இணைந்து குழுக்களாகப் பயன்பெற விரும்பினால் ஒவ்வொரு பயனாளியும் தனது பங்குத் தொகையாக அத்திட்ட மதிப்பீட்டில் (Unit Cost) 5% அளிக்க வேண்டும். மான்யத் தொகையாக 15% ஒவ்வொரு பயனாளிக்கும் அளிக்கப்படும். இக்குழுவில் பங்குபெறும் ஒவ்வொரு பயனாளிக்கும் திட்ட மதிப்பீடு (Unit Cost) கணக்கிடப்பட்டு அனைவருக்குமுரிய ஒட்டு மொத்தத் திட்ட மதிப்பீடுகள் (Unit Cost) திட்டத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்படும்.

## நகர்ப்புற ஏழைப் பயனாளிகளுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் திறம் மேம்படுத்தி வேலை வாய்ப்பு ஏற்படுத்துதல்

**(Employment opportunities through Training and skill development)**

உரிய பயிற்சி அளிப்பதன் வாயிலாக ஏழைப் பயனாளிகள் தமது திறமையை வளர்த்துக்கொள்ளச்செய்தல் என்பது இத்திட்டத்தின் மற்றொரு அங்கமாகும்.நகர்ப்புற ஏழைமக்களுக்குத் தொண்டுப் பணிகள் மற்றும் சிறு தொழில்கள் தொடர்பான பயிற்சிகளை அளித்தால் அம்மக்கள் அதைக்கொண்டு சுய வேலைவாய்ப்பு நிறுவனங்களையோ அல்லது மாதந்தோறும் உயர்ந்த சம்பளம் பெறும் வாய்ப்புகளையோ அமைத்துக் கொள்ள இயலும். கட்டிடம் கட்டும் கலை, அதன் தொடர்பான தச்சு வேலை, கொத்து வேலை மற்றும் குறைந்த செலவில் உள்ளூரிலேயே தயாரிக்கப்படும் கட்டிடப் பணிகளுக்கெனப் பயன்படும் உள்ளூர்த் தொழில் நுட்பம் அமைந்த பொருட்கள் உற்பத்தி செய்தல் ஆகியவற்றை இந்த ஏழை மக்கள் தயாரிக்க ஏதுவாகப் பயிற்சி அமைய வேண்டும். ஹட்கோ மற்றும் பி.எம்.டி.பி.சி போன்ற மாநில அரசு சார்பு நிறுவனங்களால் அமைக்கப்பெற்ற கட்டிட மையங்களை இந்தப்

பணிகட்காக அந்தந்த உள்ளூர் நிலைமைகளுக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அரசு, தனியார் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பயிற்சி நிறுவனங்களாகிய தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பல்தொழில் நிறுவனங்கள் **(Poly Techniques)**, சிராமிக் வித்யா பீடங்கள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றை இப்பயிற்சி அளிப்பதற்கெனப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாநிலங்களுக்குள் அமைக்கப்பட்டுள்ள கட்டிட நிறுவனங்களையும் இதற்கெனப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு பயிற்சிக்கும் பயனாளிக்கென்று அளிக்கப்படும் தொகை ரூ. 2000/- ஆகும். இதில் பயிற்சிக்கான பொருட்கள், பயிற்சியளிப்போரின் சம்பளம், மாதந்தோறும் பயிற்சியாளருக்கு அளிக்கப்படும் உதவித்தொகை மற்றும் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் செலவு செய்யும் தொகை ஆகியன அடங்கும். பயனாளிக்கு அளிக்கப்படும் பயிற்சியைப் பொருத்துப் பயிற்சியின் மொத்த கால அளவு இரண்டு மாதங்களிலிருந்து ஆறுமாதங்கள் வரை இருக்கலாம். அது எப்படியும் 300 மணிகளை விடக் குறைவாக இருக்கக்கூடாது.

பயனாளிகட்கு அவர்கள் தயார் செய்த சிறுவினைப்பொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக உரிய விற்பனை மையங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். இதற்கிணங்க நகர் பாலிகா சேவா கேந்திரங்கள் என்றழைக்கப்படும் கடைகளைத் தள்ளுவண்டிகள் வடிவமாகவோ அல்லது நிலையான கடைகளாகவோ அமைத்துக் கொடுக்க வேண்டும். இக்கடைகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் / வானொலிப் பெட்டிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் பழுதுபார்ப்போர், மின்சார வேலைகள் செய்வோர், கட்டிடவேலை செய்வோர், தச்சு வேலை செய்வோர் ஆகியோரை அமர்த்திப் பணிகள் செய்ய இயலும். இதில் வார இறுதி நாட்களில் கூடும் சந்தைகள், நகராட்சிக்குச் சொந்தமான மைதானங்களில் அமைக்கப்படும் மாலை நேர அங்காடிகள், சந்தைகள் அமைத்துக்

கொடுப்பதற்குரிய தொழில் நுட்ப ஆலோசனை, பெயர்ப் பலகைகள் அமைத்தல், விளம்பரப் பலகைகள் அமைத்தல் ஆகியவற்றை மறு பகுதியிலும் செய்யலாம்.

தனி மனிதத் திறமையை வளர்த்துக் கொள்ளுதல் போன்ற பயிற்சி அடைந்தோர் சமுதாய நலச்சங்கங்கள் வாயிலாகப் பணி மையம் (Service Centre), ஒன்று அமைக்கத் திட்டமிடுதல் வேண்டும். இம்மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து வைக்க வேண்டும். பெருநகர மக்கள் தத்தம் தேவைகட்கேற்ப இவர்களை அழைக்கும் பொழுது இந்தப் பயிற்சி பெற்றோர் பட்டியலிலிருந்து உரிய நபர்களைத் தேர்வு செய்து சமுதாய நலச் சங்கம் (CDS) நிர்ணயம் செய்யும் நாட்கூலி அடிப்படையில் உரிய வேலைகட்குச் சங்கம் அனுப்பலாம். இப்பணி மையத்தைப் பற்றிய போதுமான விளம்பரத்தை நகர அளவில் செய்யலாம்.

## நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழைப் பெண்களையும், குழந்தைகளையும் முன்னேற்றமடையச் செய்தல்

(Development of women and children in urban areas)

சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை அமைக்கப் பெண்கள் தனியாகவோ, குழுக்களாகவோ அமைந்து செயல்படத்தக்க வகையில் இத்திட்டம் மாற்றப்பட்டு விரிவாக அளிக்கப்பட்டுள்ளது. செயல்படத்தக்க ஏதுவாக இத்திட்டம் சிறப்பாக மாற்றப்பட்டு விரிவாக அளிக்கப்பட்டுள்ளது. அந்தந்த உள்ளூர் நிலைமைகட்கு ஏற்ற வண்ணமும், அப்பெண்களின் ஆர்வத்திற்கிணங்கவும், அவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகட்கு ஏற்பவும், திறமைக்கேற்பவும் பெண்கள் குழுக்கள் தங்கள் வருவாயைப் பெருக்கும் பல்வேறு சிறு தொழில்களில் ஈடுபடுவர். வருவாயை ஈட்டுவது மட்டுமே நோக்கம் என்ற நிலையில்லாது பெண் குழுக்கள் நல்ல வேலை வாய்ப்புக்களைத் தாமே உருவாக்கிச் சுய சார்புடையவர்களாகத் திகழ இத்திட்டம் வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ் மான்யம் பெற நகர்ப்புற ஏழைப் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி முன்னேற்ற அமைப்புகளில் உள்ள பெண்கள், குறைந்தது (10) பத்துப் பெண்கள் ஒரு குழுவாக இணைந்து அமைய வேண்டும். வருவாய் தரத்தக்க சிறு தொழில்களை (Income Generation Activities) ஆரம்பிக்கும் முன் இக்குழுவில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் மற்றொரு பெண்ணை நன்கு தெரிந்தவராக இருப்பதுடன், குழு எதற்காக அமைக்கப்பட்டுள்ளது என்ற நெறிமுறைகளையும், குழுவின் வலிமையையும், ஒவ்வொரு பெண்ணின் தகுதியையும், அவர்தம் தனித்திறமையையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இந்தக் குழு தனக்குள் ஒரு அமைப்பாளரையும் சிறு தொழில் ஒன்றினையும் தேர்வு செய்து கொள்ள வேண்டும். இச்சிறு தொழிலைத் தேர்வு செய்யும் பொழுது மிகக் கவனமாகத் தேர்வு செய்ய வேண்டும். ஏனெனில், இக்குழுவின் எதிர்காலம் முற்றிலும் இக்குழு தேர்வு செய்யும் இச்சிறு தொழிலில் அடங்கியுள்ளது. கூடுமானவரை நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைப்பால் (UPEC)* ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பல்வேறு சிறு தொழில்கள் அடங்கிய பட்டியலிலிருந்து அந்த உள்ளூர்ப் பகுதிக்குத் தகுந்தாற் போன்ற சிறுதொழில் தெரிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பெண்கள் அடங்கிய சிறு குழுவும், 'சிக்கனம் மற்றும் நாணயச் சங்கம்' ஒன்று அமைத்துக் கொள்ள வேண்டும்.

நகர்ப்புற எழை மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைப்புகள் மான்யமாக ரூ.1, 25, 000/- அல்லது திட்ட மதிப்பீட்டில் 50 சதவீதம், இதில் எது குறைவான தொகையோ அதைப் பெறத் தகுதியுடையவை.

## நகர்ப்புறக் கூலி வேலைவாய்ப்புத்திட்டம்
## (Urban Wage Employment Programme)

சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் உள்ள பொதுச் சொத்துக்களைக் கட்டுவதற்குத் தேவையான உடல் உழைப்பை, வறுமைக் கோட்டிற்கும் கீழே வசிக்கின்ற நகர்ப்புற ஏழை

மக்களிடமிருந்து பெற்று அப்பயனாளிகட்குக் கூலி வேலை வாய்ப்பினைத் தோற்றுவிக்கிறது, இத்திட்டம்.

1991 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பிற்கிணங்க, 5 இலட்சங்களுக்குள் மக்கட்தொகை உள்ள நகரங்களுக்கு இத்திட்டம் பொருந்தும். இத்திட்டத்தின் கீழ் பொருட்கள் மற்றும் உழைப்பு ஆகியவற்றின் விகிதாச்சாரம் 60 : 40 (சதவிகிதம்) ஆகப் பேணப்படும். நடைமுறையில் உள்ள குறைந்தபட்சக் கூலி விகிதம், அந்தந்தக் கால கட்டங்களில் கூலிப் பணியாளர்களாகிய பயனாளிகட்கு திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

குடிசைகள் மேம்பாட்டு வளர்ச்சித் தேசியத் திட்டமும், நகர்ப்புறக் குடிசைப்பகுதிச் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டமும் இணைந்து மேலே கண்ட திட்டத்துடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட இரண்டு திட்டங்களின் பதிலியாகவோ, மாற்றுத் திட்டமாகவோ அல்லது வேறு இதர மாநில அரசு சார்பு நிறுவனத்தின் திட்டமாகவோ இது அமைக்கப்படவில்லை

## செயலாக்கத்தின் வழிமுறை
## (Method of implementation)

அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய அடிப்படையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் பற்றி, சமுதாய நலச் சங்கங்கள் கணக்கெடுத்து அவற்றைப் பட்டியலிட்டு வைத்திருக்க வேண்டும். இதில் விடுபட்ட, அத்தியாவசியமான குறைந்த பட்ச அடிப்படை வசதிகளை உடனடியாகக் கண்டறிய வேண்டும். நகர்ப்புறச் சேரிகளின் சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற, 'குறைந்த பட்ச அடிப்படை வசதிகள்' என்ற பொருளில் தான் இந்த வாக்கியமும் இத்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட பணிகளைச் சமுதாய நலச் சங்கமானது முன்னுரிமை அடிப்படையில் இரண்டு பட்டியல்களாகத் தயார் செய்து ஒன்று 'அ' என்றும் மற்றொன்று 'ஆ' பட்டியல் எனவும் பெயரிடப்பட வேண்டும். இந்த முன்னுரிமையானது இறுதியானது. இது மற்ற எந்தவொரு முகமையாலும் மாற்றத்தக்கது அல்ல. பட்டியல் 'அ' என்பது முன்னுரிமை அடிப்படையில் விடுபட்டுப் போன குறைந்தபட்ச அடிப்படை வசதிகளையும் பட்டியல் 'ஆ' என்பது மற்ற தேவையான அடிப்படை வசதிகளையும் முன்னுரிமை அடிப்படையில் குறிக்கிறது.

எங்கெங்கே எந்தெந்தப் பணிகள் (Services) அமைக்கப்பட வேண்டுமோ, அதைப் பற்றிய பட்டியலை ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும், நகரத்தின் வறுமை ஒழிப்புப் பிரிவுக்கு மேலனுப்பப்பட வேண்டும்.

நகரத்தின் வறுமை ஒழிப்புப் பிரிவு தனித்தனியாக இந்த இரண்டு பட்டியல்களையும் ஒருங்கிணைத்து மொத்த நகரத்திற்கும் தயார் செய்து அதற்குரிய தொழில் நுட்பத்தின் விரிவான திட்ட மதிப்பீடுகளையும் பெற்றுக் கொள்ளும். அத்தகைய விரிவான திட்ட மதிப்பீடுகள் விட்டுப்போன அடிப்படைத் தேவைகள் பற்றிய 'அ' பட்டியல் முதலிலும் அதன் பிறகு 'ஆ' பட்டியலும் தயார் செய்யப்படும். திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்படும் பொழுது கிடைக்கக்கூடிய நகரத்தின் மொத்த நிதி ஆதாரங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். மாநில அரசு உள்ளாட்சி நிறுவனத்திற்கோ அல்லது மாவட்ட நகர்ப்புற வளர்ச்சி முகமைக்கோ நிர்வாக ஒப்புதல் அளிக்கும் அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும்.

உள்ளாட்சி நிறுவனம் மிகுந்த உரிமை மற்றும் திறனுடையதாக இருப்பின், சமுதாய நலச் சங்கங்களின் பரிந்துரைகளைப் பரிசீலித்து அவற்றின் நலன்கள் அடிப்படையில் இறுதி முடிவுகளை எடுக்க வேண்டும். மாவட்ட நகர்ப்புற வளர்ச்சி முகமை, மிகுந்த உரிமை பெற்றிருப்பின், சமுதாய நலச் சங்கங்களின் பரிந்துரைகளை, உள்ளாட்சி

நிறுவனம் தன்னுடைய பரிந்துரைகளையும் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல்களுடன், மாவட்ட நகர்ப்புற வளர்ச்சி முகமைக்குத் தக்க மேல் நடவடிக்கைகளுக்கு அனுப்ப வேண்டும்.

இப்படிப்பட்ட செயல் குறிப்புகளை, மாவட்ட நகர்ப்புற வளர்ச்சி முகமை, அவற்றின் நலன்களின் அடிப்படையில் பரிசீலித்துக் குறைந்த பட்ச அடிப்படை வசதிகள் செய்து தருதல் பற்றிய செயற்குறிப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து, மற்ற அடிப்படை வசதிகள் செய்து தருவதற்குரிய செயல் குறிப்புகட்கு அதற்குப் பிறகு உரிமை கொடுக்க வேண்டும். மாவட்ட நகர்ப்புற வளர்ச்சி முகமை இப்பணிக்குரிய நிர்வாக ஒப்புதல்களை வழங்க வேண்டும். பொதுவாக, இருப்பில் உள்ள தொகையில் 200 சதவிகிதத்திற்கு மேல் உள்ள தொகைக்கு நிர்வாக ஒப்புதல் வழங்குதல் கூடாது.

கூடுமானவரையில், உள்ளாட்சி நிறுவனங்களின் பொதுக் கட்டுப்பாட்டிற்குள்ளும், மேற்பார்வையிலும் பணிகள் நடைபெற வேண்டும். இவை சமுதாய நலச் சங்கங்களின் வாயிலாகச் செயல்படுத்தப்பட வேண்டும். கட்டுமானப் பணிகளின் தரத்தின் மீது எப்பொழுதும் உள்ளாட்சி நிறுவனங்களின் முழுப் பார்வையும் இருக்க வேண்டும். துறை வாயிலாகப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட வேண்டும். மாநில அரசு வெளியிடும் விவரமான நெறிமுறை -களுக்கிணங்க நாட்கூலிப் பணியாளர்களின் பெயர்ப் பட்டியல் போன்றவை பேணப்பட வேண்டும்.

ஒரு சில சிறப்புப் பணிகளைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு அவற்றைத் துறை வாயிலாகச் செய்வது இயலவில்லை என்றால் முகவர்கள் வாயிலாக உரிய ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் முறையைப் பின்பற்றியோ அல்லது அரசு நெறிமுறைகட்கிணங்கவோ அப்பொருட்களைப் பெறலாம். இந்தத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படும் பணிகளை ஒரு பாதுகாப்பான நிலைமைக்குக் கொண்டு

வந்து எப்பணிகளும் இதில் விடுபடவில்லை என்று கருதும் வண்ணம் அரைகுறையாக விடப்பட்ட மற்றும் பாதி நிலுவையாய் உள்ள அனைத்துப் பணிகளையும் முடிக்க வேண்டும்.

விலையுயர்வு காரணமாகவோ, பணிகளின் விரிவு காரணமாகவோ மற்ற எந்தவொரு காரணத்தாலோ திட்ட மதிப்பீட்டின் உயர்வு காரணமாகவோ, இத்திட்டத்தின் கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு கிடைப்பதற்கு காலதாமதம் ஆனாலோ இவை அனைத்திற்கும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிய அலுவலரோ, அதாவது மாவட்ட நகர்ப்புற வளர்ச்சி முகமையோ அல்லது உள்ளாட்சி நிறுவனமோ பொறுப்பாக நேரிடும். எனவே இந்த அமைப்புகள், தேவைப்பட்டால் மற்ற திட்டங்கள் வாயிலாகக் கிடைக்கும் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டு வந்து இத்தகைய பணிகளை முடிக்கப் பாடுபட வேண்டும்.

# 4. மகளிர் குழு அமைத்துச் சமுதாய அமைப்பு ஏற்படுத்துதல்
## (FORMATION OF WOMEN GROUPS)

ஏற்கனவே குறிப்பிட்டபடி இது 'சமூக அமைப்புகள் அதிகாரம் அடைதல்' என்ற கொள்கையின் அடிப்படையில் எழுந்த திட்டமாகும். பாரம்பரியமாகத் திட்டங்கள் மேலிருந்து கீழாகச் செயலாக்கப்படும் என்ற நம்பிக்கையிலிருந்து மாறுபட்டு, சமூக அமைப்புக்களை அமைத்து அவற்றை முன்னேற்றச் செய்து அவற்றின் மூலம் அடிப்படை வசதிகளையும், வாய்ப்புக்களையும் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்குச் செய்து தருவதே இத்திட்டத்தின் சிறப்பாகும்.

இந்த இலக்கினை அடையச் சமூக அமைப்புக்களாகிய அண்டை வீட்டுக் குழுக்கள் அண்டை வீட்டுக்கமிட்டிகள் மற்றும் சமுதாய வளர்ச்சிச் சங்கங்கள் ஆகியவற்றை நகர்ப்புற ஏழைமக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காக அந்தப் பகுதிகளில் அமைக்க வேண்டும். இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து உதவிகள் தயார் செய்தல்,பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல், பகுதிகளுக்குப் பொருத்தமான நல்ல பல திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை சமுதாய வளர்ச்சிச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படும்.

### மகளிர் குழு அமைப்பதற்கு முன் கவனிக்க வேண்டியவை

மகளிர் குழுவில் இடம்பெறும் ஒவ்வொரு பெண்மணியும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கும் குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

**இக்கணக்கெடுப்பு சமுதாய- பொருளாதாரக் கணக்கெடுப்பு** (Socio-Economic Survey) **எனப்படும்.**

(1) பொருளாதார அளவு கோல் (2) சமுதாய அளவு கோல் கொண்டு கணக்கெடுப்பு செய்வதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

## 1. பொருளாதார அளவுகோல் :

நம் திட்டக் குழுவால் ஒவ்வொரு மாநிலத்திலும் கிராமம் மற்றும் நகர்ப்புறத்திற்குத் தனிநபர் மாத வருமானத்தைக் கொண்டு அளவு கோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நம் தமிழ்நாட்டைப் பொருத்த மட்டில்

கிராமம் - தனிநபர் மாத வருமானம் - ரூ. 309.08

நகரம் - தனிநபர் மாத வருமானம் - ரூ. 500.93

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பம் எப்படி கண்டு கொள்ளப்படுகிறது?

### முதல் குடும்பம்:

குடும்ப நபர் .. 5

குடும்ப மாத வருமானம் .. ரூ. 1750

(குடும்பத் தலைவர் மட்டும் பணிக்குச் செல்கிறார்)

குடும்ப தனிநபர் வருமானம் .. ரூ. $\frac{1750}{5}$ = ரூ. 350

ரூ. 350 < ரூ. 500.93

இத்தொகை திட்டக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிடக் குறைவாக உள்ளதால் இக்குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளதாக எடுத்துக்கொள்ளப்படும்.

### இரண்டாவது குடும்பம்

குடும்ப நபர் ... 3

குடும்ப மாத வருமானம் ... ரூ.1650

(குடும்பத் தலைவர் மட்டும் பணிக்குச் செல்கிறார்)

குடும்பத் தனிநபர் வருமானம் .. ரூ. $\frac{1650}{3}$ = ரூ. 550

ரூ. 550 > ரூ. 500.93

இத்தொகை திட்டக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட அதிகமாக உள்ளதால், இக்குடும்பம் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளதாக எடுத்துக்கொள்ளப்படும்.

இரண்டு குடும்பத் தலைவர்களுக்கும் ஒரே வருமானம் தான் ஆனால், குடும்ப நபர்களின் எண்ணிக்கை வேறுபடுவதால், ஒரு குடும்பம் வறுமை கோட்டிற்குக் கீழும், ஒரு குடும்பம் வறுமைக் கோட்டிற்கு மேலும் உள்ளது.

மத்தியத் திட்டக்குழு நிர்ணயம் செய்தபடி

(அ) தனிநபர் வருமானம் அதிகமுள்ள நகரங்கள் / இடங்கள்

| | |
|---|---|
| தாதர், நாகர் அவேலி, டய்யு | ரூ. 665-90 |
| டெல்லி | ரூ. 612 -91 |
| உத்தரகாண்டம் | ரூ. 637 -67 |

(ஆ) தனிநபர் வருமானம் குறைவாக உள்ள நகரங்கள்/ இடங்கள்

| | |
|---|---|
| அசாம் | ரூ. 378-84 |
| பீகார் | ரூ. 435-00 |

தமிழ்நாட்டில் நகர்ப்புறத்தில் 22.2% குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றன.

**இந்தியாவில்**

(அ) வறுமைக் கோட்டின் கீழ் அதிகக் குடும்பங்கள் வாழும் மாநிலம்
ஒரிசா - 46.4%

(ஆ) வறுமைக்கோட்டின் கீழ் மிகவும் குறைந்த குடும்பங்கள் வாழும் மாநிலம்
ஜம்மு & காஷ்மீர் - 5.4%

## இந்தியாவின் நிலை

27.5% குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வசித்து வருகின்றன, அதாவது ஒவ்வொரு 100 குடும்பத்திற்கும் 27 குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழ்கின்றன.

ஆதாரம் : குருஷேத்ரா - கிராமிய மேம்பாட்டு மாத இதழ் - மே 2007

## (2) சமுதாய அளவு கோல்

**வறுமைக்காரணிகள்**

வறுமைக்கான காரணிகளென பலமுறைகளைப் பல்வேறு ஆய்வுகள் தெரிவு செய்திருந்தாலும் இறுதியாக வறுமைக்கான காரணிகள் என்பதற்குப் பொருளாதாரப் பின்னணியின் படி பொருளாதாரம் சாரா அளவுகோல்களும் அவசியம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அவை, வாழ்க்கை நிலைகளைக் கண்டறியப்பயன்படும் அளவுகோல்கள்:

(1) மேற்கூரை (2) தரை (3)குடிநீர் (4)சுகாதாரம் (5) கல்விநிலை (6) வேலையின் தன்மை மற்றும் (7)வீட்டிலுள்ள குழந்தைகளின் நிலை.

மிக மோசமான நிலைமை முதல் நல்ல நிலைமை வரை என்ற ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனி மதிப்பெண்கள் அதாவது 100 முதல்(மிக மோசமான நிலைமை) 0 வரை (நல்ல நிலைமை) கொடுக்கப்படும். இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணை-1இல் தெரிவித்தபடி திட்ட விதிகளின் படியும் மற்ற நகர்ப்புற ஏழைகளில் மிக அதிகமான மதிப்பெண்கள் பெறுகின்ற பயனாளிக்கு இத்திட்டத்தின் கீழ், உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படும்.

எதிர்காலப் பயனாளி அல்லது ஒவ்வொரு வீட்டிற்கும் மதிப்பெண்கள் உயர்ந்த முன்னுரிமை அல்லது மிகக் குறைந்த முன்னுரிமையான குடும்பங்கள் என்ற அடிப்படையில் பல்வேறு வகைக்

குடும்பங்களாக வகைபடுவதை இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணை-II குறிப்பிடுகிறது.

## அட்டவணை -I

| வ. எண் | அளவுகோல்கள் | அம்சங்கள் | திட்ட விதிகளின் படி கொடுக்கப்படும் மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | மேற்கூரை | ஆஸ்பெஸ்டாஸ் | 60 |
| 2. | தரை | சாணத்தால் மெழுகிய மண்தரை | 80 |
| 3. | குடிநீர் | குடிநீர்வசதி இல்லை | 100 |
| 4. | சுகாதாரம் | சமுதாய உலர் கழிப்பிடம் | 80 |
| 5. | கல்வி நிலையம் | நடுநிலைத் தேர்வு | 60 |
| 6. | வேலைவாய்ப்பு நிலைமை | குறைந்த திறமையுள்ளவர்கள் | 80 |
| 7. | வீட்டில் உள்ள குழந்தையின் நிலைமை | வேலைக்குச் செல்கிறது. சில நேரங்களில் அறிவொளி இயக்க பள்ளிக்கூடத்திற்குச் செல்கிறது. | 80 |
| | | மொத்தம் | 540 |

ஒரு வீட்டிற்குக் கொடுக்கப்படும் சராசரி மதிப்பெண் $\frac{540}{7} = 77.1$

இவர் எதிர்காலப் பயனாளியாகக் கருதப்படுவார்.

ஒரு வீட்டின் சராசரி மதிப்பெண்
முன்னுரிமை அடிப்படையில் = 77.1

**உதாரணம்:-**

வருவாய் சாரா அளவுகோலின்படி கண்டறியப்பட்ட ஒரு நகர்ப்புற ஏழைக்குடும்பத்தின் நிலைமை கீழ்க்காணும் குறைகளைக் கொண்டுள்ளது என வைத்துக் கொள்வோம்.

# அட்டவணை - II
## சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் திட்டத்தின் கீழ் பயனடைய பொருளாதாரம் சாரா அளவு கோல்கள் அடிப்படையில் ஒரு குடும்பத்திற்குரிய தகுதி

*ஒவ்வொரு அம்சத்திற்குரிய மதிப்பெண்கள்*

| அளவுகோல் | 100 | 80 | 60 | 40 | 20 | 0 |
|---|---|---|---|---|---|---|
| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| அ. வாழ்க்கையின் நிலை 1. கூரை | ஓலை | தார்ப்பாலின் | ஆஸ்பெஸ்டாஸ் | மரம் | ஓடுகள் | சிமெண்ட் |
| 2. தரை | மண் | சாணத்தால் மொழுகிய மண்தரை | செங்கல் | சிமெண்ட் | சிறிய ஜல்லி | கல் மற்றும் சலவைக்கல் |
| 3. குடிநீர் | குடிநீர் இல்லை | சமுதாயக் கைப்பம்பு | சமுதாயக் குழாய் கிணறு | தனியார் கைப்பம்பு | தனியாரின் குழாய் | தனியார் குழாய் வழியாக குடிநீர் விநியோகம் |
| 4. சுகாதாரம் | திறந்த வெளியில் மலங்கழித்தல் | சமுதாய உலர் கழிப்பிடம் | நீர் ஊற்றும் சமுதாயக் கழிப்பிடம் | தனியார் உலர் கழிப்பிடம் | தனியார் நீர் ஊற்றுகின்ற கழிப்பிடம் | வடிகால் வசதியுடன் இணைக்கப்பட்ட தனியாரின் பிளஷ் அவுட் கழிப்பிடம் |
| ஆ. கல்வி நிலைமை | எழுத்தறிவு அற்றவர் | ஆரம்பக் கல்வித் தேர்வு | நடுநிலைக் கல்வி தேர்வு | பள்ளியிறுதி வகுப்புத் தேர்வு | 10, +2 கல்வி நிலைத் தேர்வு | பட்டப்படிப்பில் தேர்வு |
| இ. வேலை வாய்ப்பு நிலைமை | குறைவான திறமையுள்ளவர் நாட்கூலி பெறுபவர் | குறைந்த திறமை உள்ளவர் வேலையற்றோர் | தானே சுயமாகத் தொழில் செய்பவர் தெருவில் தள்ளுவண்டியில் பொருள்கள் வைத்து வியாபாரம் செய்பவர் | தனக்குச் சொந்தமான இடத்தில் வேலை | தனக்குச் சொந்தமான இடத்தில் வேலை மற்றும் வியாபாரம் செய்பவர் | சமூகப் பாதுகாப்பு உள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட துறை |
| ஈ. வீட்டிலுள்ள குழந்தையின் நிலைமை | வேலை செய்யும் குழந்தைகள் எந்தப் பள்ளிக்கும் செல்வது இல்லை | வேலைக்குச் செல்லும் குழந்தைகள் ஆனால் பள்ளிக்கும் அவர்கள் செல்கின்றார்கள். | வேலைக்குச் செல்லும் குழந்தைகள் ஆனால் பள்ளிக்கும் அவர்கள் செல்கிறார்கள் | வேலைக்குச் செல்லாத குழந்தைகள் மற்றும் எந்த பள்ளி வகுப்புகளுக்கும் செல்லாத குழந்தைகள் | வேலைக்குச் செல்லாத குழந்தைகள். ஆனால் பள்ளிக்குச் செல்கின்றனர். | வேலைக்குச் செல்லாத ஆனால் அவர்கள் பள்ளிக்குச் செல்கிறார்கள் |
| | முறைசாராக் கல்வி அறிவொளி இயக்கம் சார்ந்த பள்ளி வகுப்புகள் | முறைசாராக் கல்வி அறிவொளி இயக்கம் சார்ந்த பள்ளி வகுப்புகளுக்கு சில நேரங்களில் செல்கின்ற குழந்தைகள் | முறைசாராக் கல்வி அறிவொளி இயக்கம் சார்ந்த பள்ளி வகுப்புகளுக்கு சில நேரங்களில் செல்கின்ற குழந்தைகள் | | முறைசாராக் கல்வி அறிவொளி இயக்கம் சார்ந்த பள்ளி வகுப்புகளுக்கு சில நேரங்களில் செல்கின்ற குழந்தைகள் | முறைசாராக் கல்வி அறிவொளி இயக்கம் சார்ந்த பள்ளி வகுப்புகளுக்கு சில நேரங்களில் செல்கின்ற குழந்தைகள் |

குறிப்பு : இது ஒரு ஆலோசனை மட்டுமே. இருப்பினும் நகரத்திலுள்ள ஏழைகளுக்கும் மிகுந்த ஏழையைக் கண்டறிய உள்ளூர் நிலைமைகள் மற்றும் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு, நகர வறுமை ஒழிப்புச் பிரிவின் துணையோடு சமுதாயம் சார்ந்த அமைப்புகளுடன் கலந்தாலோசித்து இந்த அளவுகோல்களை மேலும் விரிந்த அளவில் கண்டறிந்து நிர்ணயிக்கலாம்.

பொருளாதாரம் சாராத் திட்ட விதிகளின் படி, நகர்ப்புற ஏழைகள் ஒரு பயனாளிளையைக் கண்டறிவதற்கு வழிமுறை

| மதிப்பெண்கள் | | முன்னுரிமையின் தன்மை |
|---|---|---|
| 1. | 80-100 | முன்னுரிமை (மிக உயர்ந்த முன்னுரிமை) |
| 2. | 60-80 | முன்னுரிமை |
| 3. | 40-80 | முன்னுரிமை |
| 4. | 20-40 | முன்னுரிமை |
| 5. | 0-20 | முன்னுரிமை |

வருவாய் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள வீட்டிற்குத் திட்ட விதிகளின்படி எப்படி மிக உயர்ந்த முன்னுரிமை அளிப்பது என்பது குறித்து இவை கூடுதல் விவரங்கள் தருகின்றன.

மேலே குறிப்பிட்டபடி முதலில் பொருளாதார ரீதியிலும் பிறகு சமுதாய ரீதியிலும் கணக்கெடுப்புச் செய்து ஒவ்வொரு நகரத்திலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுகிறது.

அப்பட்டியல் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு, அதில் ஏதாவது தவறு இருப்பின் சரி செய்யப்படுகிறது.

# 5. SJSRY திட்டத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டிய சமுதாய அடிப்படையிலான அங்கங்கள் மற்றும் அதன் பொறுப்புகள்

(FORMATION OF COMMUNITY STRUCTURE UNDER SJSRY)

இத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டிய சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்குள் கீழ்க் காண்பவை அடங்கும்

1. அண்டை வீட்டுக்குழு (NHG)
2. அண்டை வீட்டுக்கமிட்டி (NHC)
3. சமுதாய முன்னேற்றச்சங்கம் (CDS)

சமுதாய அமைப்பு ஏற்படுத்துவது :

## 1. அண்டை வீட்டுக் குழு (Neighbourhood Group) :

குடிசைப் பகுதிகளில் 20 குடும்பங்கள் (BPL) அடங்கிய சிறு சிறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு குழுவிலும் அந்தந்தக் குடும்பத்தலைவிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவர்கள் அடிக்கடி சந்தித்து, தங்கள் பகுதியிலுள்ள (20 குடும்பங்கள்) தேவைகள் மற்றும் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்துத் தீர்மானம் எடுப்பார்கள். ஒவ்வொரு 20 குடும்பங்கள் அடங்கிய உள்ளூர்க் குழுவில் எல்லோரும் பழகக்கூடிய, தலைமைப் பண்புகளையுடைய சமூகத் தொண்டில் ஈடுபாடும் ஆர்வமும் உள்ள ஒருவரைத் தங்கள் தலைவியாகத் தேர்ந்தெடுப்பார்கள். இவர் 'இருப்பிடச் சமுதாயத் தொண்டர்' (RCV) என்று அழைக்கப்படுவார். காலமுறை இடைவெளிகளில் மாற்றம் கருதிச் சுழற்சி அடிப்படையில் இவருக்குப் பதிலாக வேறொருவரையும் இருப்பிடச் சமுதாயத் தொண்டராக மாற்றியமைக்கலாம்.

## இருப்பிட சமுதாயத் தொண்டர்களின் பொறுப்புக்கள்

1. குழுவில் உள்ள குடும்பங்களுக்குச் செய்திகளை அளித்தல்.
2. குழுவில் உள்ள குடும்பத் தலைவிகளின் அபிப்ராயங்களையும், கருத்துக்களையும் NHC மற்றும் CDS சங்கத்தில் தெரிவித்தல்.
3. குழுவில் உள்ள உறுப்பினர்களே திட்டப் பணிகளைத் திட்டமிட, செயல்படுத்த மற்றும் மதிப்பீடு செய்ய ஆவன செய்தல்.
4. சமுதாயத்தை முன்னேற்ற, மக்கள் ஈடுபாட்டை ஊக்குவித்தல்
5. சமுதாய அடிப்படைச் சேவைகள், வரைபடம் தயாரித்தல்
6. சிறு திட்டம் தயாரித்தல்
7. SJSRY திட்டப் பயிற்சி மற்றும் கருத்தரங்கங்கள் போன்றவற்றில் கலந்து கொண்டு குடிசைப்பகுதியின் பிரதிநிதியாகப் பணியாற்றுதல்.
8. தான் சார்ந்திருக்கும் பகுதி பற்றி, பல்வேறு புள்ளி விவரங்களைச் சேகரித்து வைத்தல்.
9. தங்கள் பகுதியில் தற்போது இருக்கக்கூடிய அடிப்படை வசதிகள் மற்றும் பல்வேறு அரசு நலத் திட்டங்கள் சம்பந்தமான செய்திகளை அறிந்து வைத்திருத்தல்
10. பொது மக்களுக்கு அரசு திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறி திட்டங்கள் முறையாக மக்களை சென்றடைய உதவுதல்.
11. பெண்களிடம் உள்ள தலைமைப் பண்புகளை வளர்க்கும் பொருட்டுப் பயிற்சித் திட்டங்களை நடத்துதல்
12. ஒவ்வொரு மாதமும் தன்னார்வத் தொண்டு அமைப்பின் கூட்டத்தைக் கூட்டிப் பகுதியின் பிரச்சனைகளை ஆராய்தல்
13. நகர்ப்புற ஏழை மக்கள் குடியிருப்புத் தொகுதிக்குத் தகவல் பாலமாகவும் மற்றும் செய்தித் தொடர்பாளராகவும் பணியாற்ற வேண்டும்.

14. சமுதாய வளர்ச்சிக்குப் பங்கேற்பு முறையினை வளர்த்தலும் அதற்கு உதவுதலும்.
15. நாணயம் மற்றும் சிக்கனச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்று சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லுதல், சமுதாய வளர்ச்சி நிதிக்கு நிதி சேர்த்தல்.

## 2. அண்டை வீட்டுக்கமிட்டி ( NHC Neighbourhood Committee)

10 அண்டை வீட்டு குழு அதாவது 10 இருப்பிடச் சமுதாயத் தொண்டர்களை (200 வீடுகள்) ஒருங்கிணைத்து அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு அண்டை வீட்டுக் குழுவில் இருக்கக்கூடிய அனைத்து உள்ளூர் சமுதாயத் தொண்டர்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் ஒரு தலைவியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர் கன்வீனர் என அழைக்கப்படுகிறார். இவர் NHCஇன் அலுவல்களைக் கவனிப்பார். NHC உள்ளூர் மக்களின் தேவைகளுக்கேற்பச் சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. NHCஇல் ஓட்டுரிமை இல்லாத அங்கத்தினர்களாகச் சமுதாய அமைப்பாளர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மேற்பார்வையாளர், பள்ளி ஆசிரியர், செவிலியர் போன்றவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். உள்ளூர் கமிட்டியானது தேவைகளுக்கு ஏற்ப, சிறு குழுக்களை அமைத்து, ஒவ்வொரு சிறு குழுவும் ஆரம்பக் கல்வி, மருத்துவ வசதி, சத்துணவு, விளையாட்டு, கலாச்சாரம் போன்ற பொறுப்புகளை எடுத்து நல்ல முறையில் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் செய்யலாம்.

### கன்வீனர் பொறுப்புகள்

1. உள்ளூர்ப் பிரச்சனைகளைக் கண்டறிந்து அவற்றை முக்கியப்படுத்துதல்.

2. மக்கள் ஈடுபாட்டுடன் சமுதாயத் தேவைகளையும், நோக்கங்களையும் நிறைவேற்றத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

3. குறிப்பிட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண பொறுப்பான நிறுவனங்களின் மூலம் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்தல்.

4. திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்த, குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

5. சமுதாயத்தின் திறமையை வளர்க்கவும், மேம்படுத்தவும் சமுதாய அமைப்பாளர்கள், தனியார் சேவை நிறுவனங்கள் மற்றும் இதர துறைகளின் மூலம் பயிற்சி அளித்தல்.

6. சமுதாய அளவில் கடன் வழங்கும் திட்டத்தை நடத்துதல்.

7. குழு பங்கேற்பு, சமூகத் தேவைகள், குறிக்கோள்கள் ஆகியவற்றை எதிர்கொள்வதற்கு ஆலோசனை வழங்குதல்.

8. குறுந்திட்டங்கள் தயார் செய்தல்.

9. அண்டைக் குழு வளர்ச்சிக்காக நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காகச் சமுதாயத்துடன் இணைந்து செயலாற்றுகின்ற நாணயம் மற்றும் கடன் வழங்கு சங்கத்தின் முறைகள் பற்றித் தெளிவு பெறச் செய்தல்.

10. பயனாளிகளிடமிருந்து உரிய காலத்திற்குள் கடன் தொகையை வசூல் செய்ய வழிவகைகள் செய்தல்.

## III. சமுதாய முன்னேற்றச் சங்கம்
## (Community Development Society) (CDS):

சமுதாய முன்னேற்றச் சங்கமானது பொதுவான நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுடன் NHC-யை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த முனைகிறது. சமுதாய முன்னேற்றச் சங்கத்தின் கன்வீனர்கள் தேர்தல்

மூலமாக, சமுதாய முன்னேற்றச் சங்கத்தின் தலைவியைத் தேர்வு செய்வார்கள். சராசரியாக 2000 குடும்பங்களுக்கு (BPL) ஒரு சமுதாய முன்னேற்றச்சங்கமும் அதற்கு ஒரு தலைவியும் இருப்பார்.

இது தேசிய அளவிலான பொது இலக்குகள் மற்றும் நோக்கங்களின் அடிப்படையில், நகர அளவில் அனைத்து அண்டைக்குழுக்களையும் இணைத்து அமைக்கக்கூடிய ஒரு அமைப்பு. இது சமுதாய வளர்ச்சிச் சங்கம் (CDS) என்று அழைக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அண்டைக் குழுவின் பிரதிநிதிகள் (வாக்களிக்கும் உரிமையுடன்) செயல் உறுப்பினர்களாகவும், ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர்கள் அனைவரும் (வாக்களிக்கும் உரிமை இல்லாதவர்களாக) உறுப்பினர்களாவும் இந்தச் சங்கத்தில் இருப்பார்கள்.

## இதர கௌரவ உறுப்பினர்கள் :

1. சமுதாய அமைப்பாளர்கள்
2. அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்
3. அரசு சார்புத்துறைகள்
4. முக்கிய பிரமுகர்கள்
5. அறிஞர்கள் மற்றும் கலை வல்லுநர்கள்


சமுதாய நலச்சங்கத்தைச் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழோ அல்லது இது தொடர்புடைய வேறு சட்டத்தின் கீழோ பதிவு செய்தால், பல்வேறு நிதியுதவித் திட்டங்கள் மூலமாக மிக நிறைந்த நிதி நாணய அடிப்படையில் கிடைக்க வாய்ப்புண்டு. சமுதாய நலச்சங்கமானது கீழ்க்காண்பவற்றிற்குப் பொறுப்புடையது:

1. சமுதாயம் மற்றும் பல் துறைகளின் மனிதவளம், வசதிகள், திறமைகளை உபயோகித்துச் சமுதாய அளவிலான திட்டங்களைத் தீட்டுதல்
2. சமுதாய மேம்பாட்டுச் சங்கத்தின் அங்கத்தினர்களுக்குத் தேவையான பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நடத்துதல்

3. அனைத்து நிறுவனங்களையும், துறைகளையும் ஈடுபடுத்திச் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
4. அனைத்து ஏழைச் சமுதாயத்தினருக்கும் குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுதல்.
5. சமுதாயக் கணக்கெடுப்பின் வாயிலாக உண்மையான பயனாளியைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான பொருளாதாரம் மற்றும் குடியிருப்பு வசதிகளைச் செய்து தர வழிவகைகள் செய்தல்.
6. செயல் குறிப்புகளையும் சமுதாயத் திட்டங்களையும் தயார் செய்தல். நகராட்சி மற்றும் மற்ற அரசுத்துறைகளிடமிருந்தும் சமுதாயத்திடமிருந்தும் நிதியைப் பெற்று நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்.
7. பயனாளிகள் தவறாது தாங்கள் பெற்ற கடன் தொகைகளை உரிய காலத்திற்குள் செலுத்துவதற்காக நகர்ப்புற வறுமை ஒழிப்புப் பிரிவுடன் இணைந்து செயல்பட்டு வங்கிக்கு உதவி புரிதல்.
8. உள்ளாட்சி நிறுவனத்துடனும், நகர வறுமை ஒழிப்புப் பிரிவுடனும் இணைந்து செயலாற்றிக் குறைந்த அளவு வருவாய் ஈட்டக் கூடிய பகுதிகளில் சிறிய அளவிலான சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.
9. சமுதாயத்திட்டங்களையும், கருத்துத் தீர்மானங்களையும் சமுதாயத்தின் வளத்திற்கேற்ப நடைமுறைப்படுத்துதல்.
10. வறுமை கோட்டில் வசிக்கும் இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் அவர் தம் திறமையை மேம்படுத்த அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்க வழிவகை செய்தல்.
11. குடியிருப்பு மேம்படுத்தும் திட்டத்தில் பயன் பெறத் தகுதி உள்ள பயனாளிகளைத் தேர்வு செய்வது.
12. முகாம்கள் வாயிலாக ஏழை மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது.
13. சமுதாய மேம்பாட்டிற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்வது.

# 6. திட்டத்தின் நிர்வாக அமைப்பு

இத்திட்டத்தின் நிர்வாக அமைப்பு கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.



# 7. திட்டங்கள் தயாரித்தல்

(PREPARATION OF PLANS)

## சிறுதிட்டம் (MICRO PLAN)

சிறுதிட்டம் என்பது அண்டை வீட்டுக் குழு அளவில் தயாரிக்கப்பட்டு வரும் ஒரு திட்டமாகும். இதைத் தயாரித்தல் அண்டை வீட்டுக்குழுவின் ஒரு முக்கியமான பணியாகும். அண்டை வீட்டுக் குழுவின் தலைவரான இருப்பிடச் சமுதாயத் தொண்டரால் தன் பொறுப்பில் உள்ள 20 குடும்பங்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். இத்திட்டம் தயாரிக்க ஒவ்வொரு இருப்பிடச் சமுதாயத் தொண்டரும் தான் பணி செய்யும் 20 குடும்பங்களுக்கான அனைத்து விபரங்களையும், சேகரிக்க வேண்டும். ஏத்தனை நபர்களுக்கு எந்தெந்தத் தொழில்கள், எந்தெந்தப் பயிற்சிகள் தேவை என்பதையும் குடும்ப வாரியாகப் பட்டியலிட வேண்டும். அதே போல் எத்தனை நபர்களுக்கு வங்கிக்கடன் தேவை என்றும் பிற துறைகளின் திட்டத்தில் வழங்கும் உதவியைப் பெறுவதற்கு எத்தனை நபர்கள் உள்ளனர் என்றும் கணக்கிட வேண்டும்.

இது மட்டுமல்ல தான் வாழும் பகுதியில் தேவைப்படும் அடிப்படை வசதிகள் பற்றியும் பட்டியல் இட வேண்டும். அதாவது குடிநீர், கழிப்பிட வசதி, சாலை, சமுதாயக்கூடம், கால்வாய் எனப் பட்டியல் இட வேண்டும்.

இவ்வகையில் தயார் செய்யப்பட்ட பட்டியல் முழுவதையும் ஒருங்கிணைத்து ஒரு சிறுதிட்டமாக அண்டைக் குழுவிற்கு (NHC) அனுப்பப்பட வேண்டும்.

## குறுந்திட்டம் (MINI PLAN)

பல்வேறு அண்டை வீட்டுக் குழுவால் தயார் செய்யப்பட்ட சிறுதிட்டங்கள் இங்கே ஒருங்கிணைக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் பயன்பெறுவோரின் உண்மைத் தேவைகளைக் கணித்து அவர்களையே அத்திட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்திட, திட்டம் தீட்டுவதே இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு முதல் படியாகும்.

SJSRY திட்டமானது மக்கள் திட்டமாகச் செயல்பட மக்களின் உண்மையான தேவையைக் கண்டறிந்து, அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்துத் திட்டமிட்ட முறையில் செயல்படுத்துவதற்கு ஆதாரமானது குறுந்திட்டமாகும். குறுந்திட்டம் தயாரிப்பதிலும், முடிவு செய்வதிலும் சமுதாய அமைப்பாளர்களின் பணி குறிப்பிடத் தகுந்த வகையில் அமைவது அவசியம்.

இக்குறுந்திட்டம் 200 அண்டைக் குழுக் குடும்பங்கட்கும் உரியது (For a cluster of 200 families and 10 NHGs) இதனை 1 கன்வீனர் உருவாக்குவார். இந்தக் கன்வீனர் தன் கீழுள்ள 9 RCV கள் தயாரித்துத்தரும் சிறு குறுந்திட்டங்களை ஒருங்கிணைத்து இந்தக் குறுந்திட்டத்தை மேற்சொன்னவாறு (தன்னையும் சேர்த்து) 10 RCV களின் கூட்டத்தைக் கூட்டி ஒவ்வொரு RCV தரும் குறுந்திட்டத்தின் உடனடியாய்ச் செயல்பட இருக்கும் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தி நகராட்சியின் சமுதாய அமைப்பாளர் (C.O.) மற்றும் நகராட்சிப் பொறியாளரின் ஆலோசனை பெற்று, இக்குறுந்திட்டத்தைத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் செயல்படுத்தும் விதம் ஆகியவற்றையும் இணைத்து அதனை உள்ளூர்க் கமிட்டியில் வைத்து, அதற்குரிய 90 சதவிகித நிதி ஆதாரத்தை எஸ். ஜே. எஸ். ஆர். ஒய். (SJSRY) திட்ட நிதியிலிருந்தும் மீதி 10 சதவிகித நிதி ஆதாரத்தை அந்த உள்ளூர்க் கமிட்டி மற்றும் அண்டை வீட்டுக்குழு உறுப்பினர்களிடமும் பணமாகவோ அல்லது அந்தந்தப்

பகுதியில் வசிக்கும் அண்டைக் குழு வீடுகளின் பெண் உறுப்பினர்களிடமிருந்து உழைப்பாகவோ பெற்றுச் செயல்படுத்தலாம்.

## குறுந்திட்டத்தில் இடம் பெறவேண்டியவை

1. குறிப்பிட்ட ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த வேண்டிய பல்வேறு திட்டங்கள்.
2. ஒவ்வொரு திட்டத்திலும் பயன் பெறுவோர் எண்ணிக்கை.
3. மொத்தச் செலவு.
4. நகராட்சியின் பங்கு.
5. பிற துறையின் பங்கு.
6. அரசு சாரா நிறுவனத்தின் பங்கு
7. மக்கள் பங்கு

## சமுதாயத் திட்டம் :

இது சமுதாய வளர்ச்சி சங்க அளவில், அதன் தலைவியால் தொகுக்கப்படும் திட்டமாகும். அதாவது அனைத்துக் கன்வீனரால் சமர்ப்பிக்கப்படும் குறுந்திட்டமானது இங்கே ஒருங்கிணைக்கப்படுகிறது. நகரில் உள்ள ஒவ்வொரு சமுதாய முன்னேற்றச் சங்கத்திற்கும் தனித்தனியாக ஒரு திட்டம் உருவாக்கப்படும்.

## நகரத்திட்டம் தயாரித்தல்

சமுதாய மேம்பாட்டுச் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட சமுதாயத் திட்டங்களை ஒருங்கிணைத்து நகர அளவில் தயாரிக்கும் திட்டம் 'நகரத்திட்டம்' ஆகும். ஒவ்வொரு கன்வீனரும் தயாரித்து அளிக்கும் குறுந்திட்டம் பத்து கன்வீனர்கள் தயாரித்து அளிக்கும் பல குறுந்திட்டங்களோடு (Integrated) ஒன்று சேர்க்கப்பட்டு அவை (2000 குடும்பங்கள் - பத்துக் கன்வீனர்கள்) 2000 குடும்பங்களுக்கு ஒரு சமுதாய

அளவிலான திட்டமாக வடிவெடுக்கின்றது. அதனை ஒரு சமுதாய அமைப்பாளர் முன்னின்று செயல்படுத்துகிறார். இவ்வண்ணமாக நகரின் ஒவ்வொரு 2000 குடும்பங்கட்கும் ஒரு சமுதாயத்திட்டம் மலர்கின்றது. இவ்வாறு ஒரு நகரத்தில் பல சமுதாயத் திட்டங்கள் (உதாரணமாக 6000 குடும்பங்கள் என்றால் மூன்று சமுதாயத் திட்டங்கள்) மலர்கின்றன. அவை அனைத்தும் ஒன்று குவிக்கப்பட்டு நகரத்திட்டமாக வடிவமைக்கப்படுகிறது. இதன் செயல் அலுவலராக (Executive Functionary) நகராட்சி ஆணையர் இருக்கிறார். இவரோடு இணைந்து செயலாற்ற நகராட்சிப் பொறியாளரும் நகர் நல அலுவலரும் உள்ளனர்.

நகர அளவில் மனித வளம், வசதிகள், திறமைகளைப் பயன்படுத்தி உள்ளூரில் கைத்தொழில்கள் தொடங்குவதற்குரிய பயிற்சியாளர்களைக் கொண்டு அண்டைக் குழுக் குடும்பத்தின் பெண் உறுப்பினர்கட்குப் பயிற்சி அளிக்கவும், இந்த நகர அமைப்புத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு துறைகளை ஈடுபடுத்திச் சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான தேவையைக் கண்டறிந்து அவற்றைச் செயல்படுத்தவும் நகர அளவிலான திட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இது சமூக அமைப்பின் திட்டங்களான சிறுதிட்டம், குறுந்திட்டம், சமூகத் திட்டங்களைச் சரிபார்த்து நிதி ஆதாரங்களைப் பொறுத்து இவற்றிற்கு அங்கீகாரம் நகர அளவில் கிடைக்கிறது. நகராட்சி ஆணையர், நகராட்சி அளவில் சமுதாய அமைப்பாளருடன் ஏனைய அதிகாரிகளுடன் கலந்து அங்கீகாரம் வழங்க நகர் மன்றக் கூட்டத்தில் இத்திட்டங்களின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

## சமுதாய அமைப்பு

இத்திட்டத்தின் வெற்றியில் சமுதாய அமைப்பின் பங்கு முக்கியத்துவம் பெறுவதால், அவர்கள் தங்கள் பொறுப்பினை உணர்ந்து இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுவதைக் கண்காணித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.



## தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம்

203, அழகேசன் சாலை, சாயிபாபா காலனி, கோயம்புத்தூர் - 641 011.
தொலைபேசி : 0422 - 2441086 நிகரி : 0422 - 2457404 தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் : tniuscbe@vsnl.net இணையம் : www.tnius.org

நந்தி ஆப்செட், கோவை - 43. ☎ 4202395